உ

அம்பாள் துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

பதிவு இல. J/3/84/23-09-1988

# 22ஆவது ஆண்டறிக்கையும்

# வரவு செலவு அறிக்கையும்

# 01-01-2003 - 31-12-2003

2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை.

## 2004

### நிர்வாகசபை:

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.- தலைவர்

திரு. மு. சபாநாதன், பதில் நீதிபதி - உப தலைவர்.

திரு. சி. அருளானந்தசிவம், - உப தலைவர்

DR. தி. திவாகரன் - பொதுச்செயலாளர்

திரு. அ. சண்முகநாதன், - பொருளாளர்

திரு. நா. தவநாதன் } இணைச் செயலாளர்

திரு. ஆறு. திருமுருகன் } இணைச் செயலாளர்

திரு. சு. ஏழூர்நாயகம் - உப பொருளாளர்

திரு. ந. செல்வநாயகம்

திரு. ச. ஆறுமுகநாதன்

திரு. மு. அருளையா

திரு. ச. விநாயகரத்தினம்

திரு. ச. கந்தையா

திரு. சி. குமாரசாமி

திரு. நா. தவமணிநாயகம்

திரு. சு. முருகையா

திரு. சி. புஸ்பநாதன் (கொழும்புப் பிரதிநிதி)

திரு. வி. பாக்கியநாதன் (இந்து இளைஞர் சங்கப் பிரதிநிதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

துர்க்காதேவி துணை

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## தெல்லிப்பழை

# இருபத்திரண்டாவது ஆண்டு அறிக்கை

# 01–01–2003– 31–12–2003 வரை

எங்கள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையினால் 03-02-1982ஆம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லம் ஸ்தாபிக்கப் பெற்றது. இவ்வில்லத்தின் இருபத்திரண்டாவது ஆண்டறிக்கையும், பட்டயக் கணக்காய்வாளர் ஸ்தாபனத்தால் கணக்காய்வு எண்பார்வை செய்யப்பெற்ற 2003க்குரிய வரவு செலவு கணக்கறிக்கையும் பொதுமக்கள் அறிவதன் பொருட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது. இதனால் எங்கள் நிர்வாகசபை பெருமகிழ்ச்சியடைகின்றது.

## இல்லத்தில் இடம் பெறும் பிள்ளைகள் விபரம்:

எங்கள் இல்லத்தில் இன்று 65 பெண்பிள்ளைகள் இடம்பெற்றுள்ளனர். இவர்களுடன் இல்லப்பணிகளை செவ்வனே ஆற்ற ஆறுபேரும் விவாகமாகாத பெண்களுமாக பத்துப்பேர் உள்ளனர். இவற்றைவிட சிற்றூழியர்கள், காவலாளிகள், கோசாலைப்பராமரிப்பாளர் என மேலும் மொத்தமாக பத்துப்பேரும் பணிபுரிகின்றனர். மேலும் சிறப்பு அம்சமாக துறவற வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் அருட்சகோதரி அம்மையார் அவர்களும் மாதாஜி அம்மையார் அவர்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரை

| | |
|---|---|
| கல்வி கற்போர் எண்ணிக்கை | – 42 |
| யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் | – 3 |
| யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் கல்வி கற்போர் | – 4 |
| க.பொ.த. உயர்தரகல்வி கற்பவர்கள் | – 4 |
| க.பொ.த. சாதாரணதரம் 2003 சித்தியடைந்தோர் | – 5 |
| திருமகள் அழுத்தகப் பணியாளர் | – 1 |
| மகளிர் இல்லப் பணியாளர் | – 6 |
| 55 வயதுக்கு மேற்பட்ட அன்னையர்கள் | – 14 |
| தேவஸ்தான அலுவலகப் பணிபுரிவோர் | – 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| துர்க்காதேவி ஆலய அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் | ~ | 4 |
| சைவத்தமிழ் நூலகப் பணியாளர்கள் | ~ | 2 |
| கோசாலைப் பணியாளர்கள் | ~ | 2 |
| சிற்றூழியர்கள் | ~ | 4 |

பிள்ளைகளில் ஆண்டு 1 முதல் 5 வரையுள்ளவர்கள் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும், ஆண்டு 6 முதல் 13 வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் கல்வி பயிலுகின்றார்கள். இவர்களில் 32 பிள்ளைகள் தாய், தந்தை இருவரையும் இழந்தவர்கள் ஆவர்.

## அரசாங்கப் பதிவு:

எங்கள் துர்க்காபுரம் மகளிர் இல்லம் அரசாங்க நன்னடத்தைப் பாதுகாவலர் சிறுவர் திணைக்கள சட்ட விதிகளின் பிரகாரம் 23-09-1988ஆம் ஆண்டு பதிவு செய்துள்ளோம். இதன் பிரகாரம் அரச அங்கீகாரம் பெற்ற எங்கள் இல்லத்தின் பதிவு இல. J/3/84 என்பதாகும்.

## கல்விப்பணி:

பெண் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு கல்விதான் சிறந்ததாக அனைவராலும் கருதப்படுகின்றது. சைவப்பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன் தொடக்கி வைத்த மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மாணவர்கள் இடைநிலைக்கல்வியைக் கற்று வருகின்றனர். மேலும் கனிஷ்டபிரிவு கல்வியை மாணவர்கள் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர். யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் 4 பேர் பயின்று வருகின்றனர். செல்வி மு. கலாநிதி, செல்வி ஸ்ரீ. கலைவதனி, செல்வி கு. சர்மிளா, ஆகியோரும் இரண்டாம் ஆண்டில் செல்வி கே. புஸ்பலட்சுமி அவர்களும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்கள் இசைத்துறையில் மட்டுமல்லாது பேச்சு, நடனம், நாடகம், விளையாட்டுத் துறைகளிலும் முன்னணி பெற்றுள்ளனர்.

## போட்டிப் பெறுபேறுகள்:

இராமநாதன் கல்லூரியில் சேர் பொன். இராமநாதன் நினைவுப் பேச்சு அதிமேற் பிரிவில் செல்வி இ. கோகிலா 1ஆம் இடம்பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். மற்றும் பிரிவுகளில் செல்வி ம. சுமித்திரா, 2ஆம் இடத்தையும், செல்வி வி. ஜலஜா 2ஆம் இடத்தையும் பெற்று பணப் பரிசில்களையும் பெற்றுள்ளனர். மேற்படி நினைவுதின போட்டியில் கட்டுரை எழுவதில் செல்வி து. துஸ்யந்தி முதலாம் இடத்தையும், செல்வி சி. தர்சினி மூன்றாம் இடத்தையும், பெற்றுள்ளார்கள். பண்ணிசைப் போட்டியில் செல்வி து. துஸ்யந்தி வெள்ளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதக்கத்தையும் பெற்றுள்ளார். குழுக்களுக்கான ஆங்கிலப் பாடல் போட்டியில் முதலாம், இரண்டாம் இடத்தையும் பெற்று இல்லத்துக்கு பெருமை சேர்த்துத் தந்துள்ளனர். விளையாட்டுப் போட்டி பலவற்றில் பங்கு கொண்டு செல்வி நா. சத்தியா சிறந்த விளையாட்டு வீராங்கனையாக விளங்குகின்றார்.

## பிரத்தியேக கல்வி பாடபோதனை:

இல்லப்பிள்ளைகளின் கல்வி விருத்தியின் பொருட்டு கணிதம், ஆங்கிலம், சங்கீதம், போன்ற துறைகளுக்கு கற்பிக்க துறைசார்ந்த பிரத்தியேக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலப்பாடத்துக்கு திரு. சி. அருளானந்தசிவம் அவர்களும், செல்வி ஜானகி கமலநாதன் அவர்களும், கணித பாடத்துக்கு செல்வி அருந்ததி இராமச்சந்திரன் அவர்களும், கற்பித்து வருகின்றனர்.

## நிதி உதவி:

எங்கள் மகளிர் இல்லப்பிள்ளைகளில் கல்விப்பணிக்கும், உணவு, உடை, வைத்தியம் போன்ற இன்னோரன்ன செலவுகளுக்கு உள்நாட்டு அன்பர்களும் வெளிநாட்டு அன்பர்களும் உதவி வருகின்றனர். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உள்ள பொது நிறுவனங்கள் எங்கள் இல்ல வளர்ச்சிக்கு தயாள சிந்தையுடன் தாராளமாக நிதி உதவி வருகின்றார்கள். ஆலயத்தில் நடைபெறும் திருமண நிகழ்ச்சிகள், பிறந்ததின வைபவங்கள் தம்தம் பெற்றோர்களின் சிரார்த்ததின வைபவங்களிலும் தாங்களும் பங்கு கொண்டு இல்லப்பிள்ளைகளுக்கும் உணவு வழங்கி சிறப்பிக்கின்றனர். பல்வேறு வகைகளிலும் உதவி வரும் அன்பர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையோம்.

**எமக்கு ஆதரவு நல்கி ஊக்குவிக்கும்**

**நிறுவனங்களையும் அன்பர்களையும் குறிப்பிடுகிறோம்:**

1. **அபயகரம்** ~ அவுஸ்ரேலியா
2. **ஈழத்தமிழர் கழகம்** ~ அவுஸ்ரேலியா
3. **சிவயோகம்** ~ இலண்டன்
4. **தமிழர் நம்பிக்கை நிறுவனம்** ~ இலண்டன்
5. **ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்** ~ இலண்டன்
6. **ஸ்கொட் நிறுவனம்** ~ இலண்டன்
7. **சைவமுன்னேற்றச் சங்கம்** ~ இலண்டன்
8. **G. T. Z. நிறுவனம்** ~ இலண்டன்
9. **திருமதி முருகேசம்பிள்ளை குடும்பம்** ~ இலண்டன்
10. **DR. வி. கருணாகரன் குடும்பம்** ~ இலண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **செல்வி சுலோஜனா பாஸ்கரன்** - அவுஸ்ரேலியா
12. **திரு. க. சிவராசா** - கொலண்ட்
13. **திருமதி ஏழிசைநாயகி** - பிரான்ஸ்
14. **திரு. க. லிங்கேஸ்வரன் குடும்பம்** - சுவிஸ்லாந்து
15. **திரு. பொ. சு. பாலசுப்பிரமணியம்** - பம்பலப்பிட்டி
16. **திரு. ஜெயபாலன் லிங்கேஸ்வரன்** - இலண்டன்
17. **திருமதி இரத்தினேஸ்வரி சுப்பிரமணியம்** - நினைவு நிதியம் அமெரிக்கா.
18. **திரு. பிரதீபன் ஜெகநாதன்** - அறக்கட்டளை நிதியம் நியூசிலாந்து

## இல்லப்பணியாளர்களின் பணி:

இல்லப் பணியாளர்களாக செல்வி சு. சுகந்தினி, செல்வி செ. நாகராணி, செல்வி எஸ். பூமலர், செல்வி எஸ். மீனா ஆகியோர் இல்லப்பிள்ளைகளின் உணவு உடை ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருந்து பணியாற்றுகின்றனர். மற்றும் பல்வேறு பணிகளுக்காக செல்வி கா. கந்தையா, செல்வி பெ. செல்வராணி, திருமதி சி. தேவி, திருமதி இராஜேஸ்வரி பரமானந்தம் ஆகியோர் பொறுப்பாக இருந்து பணியாற்றி வருகின்றனர். செல்வி த. மஞ்சுளா அவர்கள் அலுவலகப் பணியை முன்னின்று உதவுகின்றார். செல்வி ச. ரேவதி அவர்கள் மகளிர் இல்ல வரவு செலவு கணக்குகளை பதிவு செய்து உதவி வருவது குறிப்பிடத்தக்கதாகும். திருமதி நந்தினி சிவராசன் அவர்கள் பிள்ளைகளின் நாட்டிய நாடகங்களை மேடையேற்றி வருகின்றார். செல்வி வி. வடிவாம்பிகை அவர்கள் பண்ணிசைப் பயிற்சியளித்தும் வருகின்றார். பல்வேறு வகையில் இல்லப்பிள்ளைகளுக்கு பணியாற்றி வரும் பணியாளர்கள் அனைவருக்கும் என்றென்றும் நன்றியுடையோம்.

## இருபத்தோராம் ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்:

துர்க்காபுரம் மகளிர் இல்லப்பிள்ளைகளின் இருபத்தோராவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் 09-03-2003 ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தேவஸ்தானத்தின் அன்னபூரணி மணிமண்டபத்தில் நடைபெற்ற விழாவுக்கு எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவரும் கல்வியியல் பேராசிரியருமான பேராசிரியர் சபா. ஜெயராஜா அவர்கள் வருகை தந்து சிறப்பு உரையை வழங்கினார். மேலும் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி விஜயராணி பசுபதிப்பிள்ளை அவர்கள் வருகை தந்து இல்லப்பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கி மகிழ்வித்தார். வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன சுவாமிகள் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக்குருக்கள், ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை வழங்கினார்கள். தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அதிபர் திரு. பொ. சுந்தரலிங்கம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி விழாவைச் சிறப்பித்தனர். சிறப்புற நடைபெற்ற இவ்விழாவுக்கு ஆத்மீகச் செல்வர்கள், அன்பர்கள், நலன்விரும்பிகள் வருகை தந்தமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. பிள்ளைகளின் நன்மை கருதி வருகை தந்த அனைவருக்கும் நன்றியுடையோம். விழாவின் ஈற்றில் அனைவருக்கும் மதிய போசனம் வழங்கிச் சிறப்பித்தோம்.

## சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம்:

இவ்வில்லத்தில் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் தம்தம் கடமைகளை தாமாகவே ஆற்றும் இயல்புடையவர்கள். இவர்கள் உறவினர்களின் உதவியை நாடாது இல்லப்பிள்ளைகளின் உதவியுடன் மகளிர் இல்லத்தையே நம்பி வாழ்பவர்கள். இன்று அன்னையர்கள் 10 பேர் இவ்வில்லத்தில் இடம்பெற்றுள்ளனர். ஆலயச் சரியைத் தொண்டுகள், இல்லப்பணிகள் என்பவற்றை நல்லமுறையில் ஆற்றி வருகின்றனர். இவர்களுக்குரிய கைச்செலவுக்குரிய பணம், உணவு, உடை, வைத்தியம் போன்ற செலவுகள் யாவும் இல்ல நிதியில் இருந்து வழங்கி வருகின்றோம். இவர்கள் அனைவரும் துர்க்கை அம்பாளை வழிபாடு செய்து மிகுந்த மனநிறைவாகவும் அமைதியாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

### நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபப் பணிகளும் சிறப்புறு நிகழ்வுகளும்:

நல்லைக்கந்தப் பெருமானின் திருவருள் துணையினால் மணிமண்டபப்பணிகள் யாவும் சிறப்புற நடைபெற்று வருகின்றது. நூற்றுக்கு மேற்பட்ட திருமண நிகழ்வுகளையும் சமய விழாக்களையும் நூல்வெளியீட்டு விழாக்களையும் மிருதங்க அரங்கேற்றங்களும் கடந்த ஆண்டுகள் போல் இவ்வாண்டும் நடைபெற்றன.

ஆண்டுகள் தோறும் நடைபெறும் நல்லைக்கந்தப் பெருமானின் மகோற்சவகாலங்களில் முருகப்பெருமானைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கி வருகின்றோம். மகோற்சவ காலங்களில் அன்னதானம் சிறப்பாக நடைபெற யாழ் வர்த்தகப் பெருமக்கள் பணமாகவும், அரிசி மரக்கறி வகைகளை பொருட்களாகவும் வழங்கி வருகிறார்கள். மேலதிகமாக அன்னதானச் செலவுக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் நிதியை வழங்கி வருகின்றது. அன்னதான பணிகளுக்கு பேருதவி வழங்கி வருகின்ற வர்த்தகப் பெருமக்களுக்கு நாம் என்றென்றும் நன்றியுடையோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அன்னதானப் பணிகள் சிறப்பாக நடைபெற வர்த்தகப் பெருமக்களிடம் சென்று ஆதரவு பெற்றுவரும் திருமகள் அழுத்தக முகாமையாளர் திரு. ச. இராசரத்தினம், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், வி. கமலநாதன் போன்றோரின் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் மகோற்சவகாலம் இருபத்தைந்து தினங்களும் மாலை வேளையில் இசை நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றனர்.

நவராத்திரி காலம், கந்தசஷ்டி காலங்களில் சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றது. கந்தசஷ்டி பாரணை தினமான 31-10-2003 அன்று அடியார்களுக்கு பாரணை போசனம் வழங்கப்பட்டது. சைவமும் தமிழும் வளர்த்த நல்லூர் தவப்பெருந்திரு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை 14-12-2003 ஞாயிறு கார்த்திகை மக நட்சத்திரத்தில் சிறப்பாக நடைபெற்றது. இங்கு குருபூசை நிகழ்விலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்களும், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களும், சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். மகளிர் இல்லப் பிள்ளைகளின் பண்ணிசை நிகழ்வுடன் விழா பூர்த்தி பெற்றது. ஈற்றில் மகேஸ்வர பூசையும் இடம்பெற்றது. 20-04-2003 அன்று கொழும்பு விவேகானந்த சபையினர் சுவாமி விவேகானந்தரின் நூற்றுஐம்தாவது நினைவு தினத்தை சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர்.

10-05-2003 சனிக்கிழமை 2ஆம் உலக இந்து மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ் பிராந்திய அலுவலக ஏற்பாட்டில் இவ்விழா சிறப்பாக நடைபெற்றது.

## காணி கொள்வனவு:

மகளிர் இல்லப்பிள்ளைகளின் வளர்ச்சியில் விளையாட்டுத்துறை முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே இக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மேற்குப்புறமாக மேற்கு வீதியில் மேற்குப் பக்கமாக 24 பரப்பு காணியை இவ்வாண்டு கொள்வனவு செய்யப்பட்டது. இதனால் இன்று மகளிர் இல்லப்பிள்ளைகளுக்கு ஒரு விளையாட்டு மைதானம் உருவாகி வரும் செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி கூறுகிறோம்:

இம்மகளிர் இல்லத்தின் இருபத்திரண்டாவது ஆண்டு நிறைவிலே பலருக்கு நன்றி கூற வேண்டிய கடமை எமக்குண்டு.

✤ எங்கள் இல்லப்பணிகளுக்கு ஆதரவு வழங்கி வரும் தேவஸ்தான நிர்வாக சபையினர், துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையினர், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர், யாழ். அரச அதிபர் வலி-வடக்குப் பிரதேச செயலர்.

✤ எமது பணியை நல்லபடி ஊக்குவித்து அன்பளிப்புக்களை நல்கிவரும் உள்ளூர், வெளியூர் அன்பர்கள்.

✤ மகளிர் இல்லப்பிள்ளைகளுக்கு வைத்திய உதவி வழங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையினர், மற்றும் DR.. ம. மகேசன், DR. க. ஈஸ்வரி, மல்லாகம் அர்ச்சனா வைத்தியசாலை நிறுவனத்தினர் ஆகியோர்.

✤ இல்லக்கடமைகளிலும் மற்றும் மகளிர் இல்லப்பிள்ளைகளின் கலை நிகழ்வுகளிலும் முன்னின்று பயிற்சி அளித்து உதவும் அருட்சகோதரி ஜதீஸ்வரி, திருமதி நந்தினி சிவராசன், செல்வி வி. வடிவாம்பிகை ஆகியோர்.

✤ தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் மற்றும் பணியாளர்கள்.

✤ நீர்மின் இணைப்புக்களைச் செய்து உதவும் திரு. த. தயானந்தன், திரு. மா. சௌந்தரராஜன் அவர்கள்.

✤ நல்லார் துர்க்காதேவி மணிமண்டபப் பணியாளர்கள் நால்வருக்கும் அத்துடன் அங்கு நடைபெறும் நிகழ்வுகள் அத்தனையிலும் பங்குகொண்டு பணியாற்றும் திரு. நா. தவமணிநாயகம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ கொழும்பு வங்கித் தொடர்புகள் வெளிநாட்டு அன்பர்களின் ஒருங்கிணைப்பாளராகவும் இயங்கி பணியாற்றி உதவிவரும் எங்கள் நிர்வாகசபை கொழும்புப் பிரதிநிதி திரு. சி. புஸ்பநாதன் அவர்கள்.

✤ சமய சொற்பொழிவுகளின் பேரில் அவுஸ்ரேலியா, இலண்டன் கனடா ஆகிய மேற்கு நாடுகளுக்கு சென்று சமயச் சொற்பொழிவு ஆற்றி இல்லப்பணிகளின் சிறப்பை எடுத்துரைத்து ஆதரவுகளைப் பெற்றுவரும் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்.

✤ கடிதத் தொடர்புகள், அச்சகப்பணிகள், அன்பளிப்புகள், வங்கி வைப்புக்கள், ஆகிய பணிகளை நல்லபடி ஆற்றும் அலுவலர் திரு. கா. சிவபாலன், திரு. வ. நடராசா, செல்வி ச. ரேவதி, செல்வி த. மஞ்சுளா திருமதி சி. தவனேஸ்வரி,ஆகியோர்.

✤ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவினர், யாழ். சேவை வானொலி நிலையத்தினர்.

✤ காலமும் நேரமும் அறிந்து செய்திகளை வெளியிடும் உதயன், வலம்புரி, ஈழநாடு, தினக்குரல், தினகரன், வீரகேசரி, யாழ். தினக்குரல் ஆகிய பத்திரிகைத் துறையினர்.

✤ மகளிர் இல்லக்கணக்கு விபரங்களை நல்லபடி ஆற்றி உதவும் இலங்கைவங்கி சுன்னாகம், தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம், யாழ்ப்பாணம், இலங்கை வங்கி பம்பலப்பிட்டி, யாழ்ப்பாண வர்த்தகவங்கி, ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் ஆகியன.

✤ நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நல்லூர் மகோற்சவ காலங்களில் நடைபெறும் அன்னதானப் பணிகளுக்கு சுகாதார சேவைப்பணிகளைநல்லபடி ஆற்றிவரும் யாழ். மாநகரசபையினர், பணியாளர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ மகளிர் இல்ல அச்சகப் பணிகளை நல்லபடி நிறைவேற்றித்தரும் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினர் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**"நடமாடக்கோயில் நம்பர்க் கொன்றீயில்**
**படமாடக்கோயில் பரமர்க் கங்காமே"**

என்பதை மனதில் இருத்தி மக்கள் பணியை மகேசன் பணியாக நினைத்து அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,** J. P.
தலைவர்

**திரு. அ. சண்முகநாதன்**
பொருளாளர்

**திரு. ஆறு. திருமுருகன்**
**திரு. நா. தவநாதன்**
இணைச்செயலாளர்கள்.

**திரு. சு. ஏழூர்நாயகம்**
உப-பொருளாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகசபை,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.
தெல்லிப்பழை.

அன்புடையீர்,

2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கை

## 1. பொதுநிதி ரூபா 221941177-78

01-01-2003ல் மீதியாக ரூபா 19180522-12 இருந்தது. இவ்வருட செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 3013595-66 சேர்க்கப்பட்டு இவ்வருட இறுதி மீதியாக ரூபா 22194117-78 உள்ளது.

## 2. அறக்கட்டளை நிதி ரூபா 2644000-00

சென்ற வருட மீதியே இவ்வருட மீதியாக உள்ளது.

## 3. நிலையான சொத்து ரூபா 5833316-73

01-01-2003ல் மீதியாக ரூபா 4900879-69 உள்ளது. இவ்வருட சேர்க்கையாக புதிய காணி ரூபா 1066000-00 புதிய காணியில் மதில் கட்டிய வகையில் ரூபா 290095-00 கணனி ரூபா 109500-00 இவ்வருட பெறுமானத்தேய்வு ரூபா 533157-96 சதம் கழிக்கப்பட்டும். இவ்வருட இறுதி மீதியாக ரூபா 5833316-73 சதம் உள்ளது.

## 4. நிலையான வைப்பு ரூபா 7507493-20 சதம்

4.1 வர்த்தக வங்கி யாழ்ப்பாணக்கிளையில் சென்ற வருட மீதியான ரூபா 1246000-00 இவ்வருட மீதியாக உள்ளது.

4.2. தேசிய சேமிப்பு வங்கி யாழ் கிளையில் அறக்கட்டளை நிதி வைப்பாக சென்ற வருட மீதியான ரூபா 928493-20 உள்ளது.

4.3. தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையில் சென்ற வருட மீதியான ரூபா 500000-00 உள்ளது. இவ்வருட அறக்கட்டளை நிதியாக ரூபா 1097000-00 உள்ளது. மொத்தமாக ரூபா 1597000-00 உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.4. இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் சென்ற வருட மீதியான ரூபா 1100000-00வும் அறக்கட்டளை ரூபா 1086000-00 சேர்த்து மொத்தமாக ரூபா 2186000-00 ஆகும்.

4.5. மக்கள் வங்கி சுன்னாகம் கிளையிலும் மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளையிலும் தலா ரூபா 100000-00 வீதம் அறக்கட்டளை நிதி வைப்பாக உள்ளது. சென்ற வருட மீதியே இவ்வருட மீதியாக உள்ளது.

4.6. இலங்கை வங்கி பம்பலப்பிட்டி கிளையில் சென்ற வருட மீதியான ரூபா 350000-00 பொதுவைப்பாகவும் அறக்கட்டளை வைப்பாக ரூபா 1000000-00 உள்ளது. மொத்தமாக 1350000-00 உள்ளது.

## 5. சேமிப்பு வைப்புக்கள் ரூபா 9984096-41 சதம்.

**51.** இலங்கைவங்கி காங்கேசன்துறை கணக்கு இல. **6023**

| | |
|---|---|
| 1-1-2003ல் மீதி | 1435271-30 |
| கூட்டு: வட்டி | 75925-13 |
| 31-12-2003ல் மீதி | 1511197-13 |

**52.** தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம்
கணக்கு இல**10072-01-80629**

| | |
|---|---|
| 1-1-2003ல் மீதி | 1696962-09 |
| கூட்டு:வட்டி | 106004-26 |
| வைப்பு | 100000-00 |
| | 1902966-35 |
| கழி: வரி | 9485-55 |
| 31-12-2003ல் மீதி | 1893480-80 |

**53.** தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம்
கணக்கு இல**10006-02-72370**

| | |
|---|---|
| 1-12003ல் மீதி | 583827-54 |
| கூட்டு: வட்டி | 34940-14 |
| | 618767-68 |
| கழி: வரி | 2398-01 |
| 31-12-2003ல் மீதி | 616369-67 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5.4.** இலங்கை வங்கி சுன்னாகம் கணக்கு இல. **21288**

| | |
|---|---|
| 1-1-2003ல் மீதி | 1679210-00 |
| கூட்டுக: வைப்பு | 500000-00 |
| வட்டி | 88830-20 |
| 31-12-2003ல் மீதி | 2268040-20 |

**5.5.** தேசிய சேமிப்பு வங்கி வெள்ளவத்தை
கணக்கு இல. **10070-02-14159**

| | |
|---|---|
| 1-12003ல் மீதி | 1323829-57 |
| கூட்டுக: வைப்பு வட்டி | 80441-74 |
| | 1404271-31 |
| கழி: வரி | 674-59 |
| 31-12-2003ல் மீதி | 1403596-72 |

**5.6.** வரையறுக்கப்பட்ட கற்றன் நஷனல் வங்கி, சுன்னாகம்
கணக்கு இல. **0200-72801-8**

| | |
|---|---|
| இவ்வருட வைப்பு | 500000-00 |
| வட்டி | 5172-30 |
| 31-12-2003ல் மீதி | 505172-30 |

**5.7.** முற்போக்கு சேமிப்பு கணக்கு வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி
யாழ்ப்பாணம் கணக்கு இல. **860096001**

| | | |
|---|---|---|
| 1-1-2003ல் மீதி | | 1555448-84 |
| கூட்டுக: வைப்பு | 100000-00 | |
| வட்டி | 79595-36 | |
| இலாபம் | 51892-22 | 231487-58 |
| | | 1786936-42 |
| கழி: வரி | | 696-83 |
| 31-12-2003ல் மீதி | | 1786239-59 |

## 6. நடைமுறை வைப்புக்கள் 1402910-03

இலங்கை வங்கி சுன்னாகம் கணக்கு இல.4923ல் ரூபா 556112-29 சதமும், வர்த்தகவங்கி யாழ்ப்பாணம் கணக்கு இல. 1060012977ல் ரூபா 574207-60 சதமும் இலங்கை வங்கி பம்பலப்பிட்டி கிளை கணக்கு இலக்கம் 0037-01-0004020-4ல் ரூபா 272590-14 சதமும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கையிருப்பு ரூபா 110301-41

1-1-2004ல் கையிருப்பானது எம்மால் பரிசீலிக்கப்பட்ட போது மேற்படி தொகை பொருளாளரிடம் இருந்து அவதானிக்கப்பட்டது.

## 8. வருமான செலவினம்

### 8.1. வருமானம்

பொது அன்பளிப்பாக ரூபா 5822816-28 சதமும், திருமண அன்பளிப்பாக ரூபா 1016150-00வும் பெற்ற வட்டியாக ரூபா 1120593-71 சதமும் சேர்த்து மொத்த வருமானமாக ரூபா 7959559-99 சதம் ஆகும்.

### 8.2. செலவினம்

உணவுத் தொகையாக ரூபா 645335-25 சதமும், பொது அன்பளிப்பாக ரூபா 115850-00 ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான யாத்திரிகர் விடுதிக்கு 1000000/- அன்பளிப்பாகவும், நல்லூர் மணிமண்டப செலவாக ரூபா 1093363-58 சதமும் மேற்குறிப்பிட்ட செலவுகளுடன் ஏனைய செலவுகளும் சேர்த்து மொத்தமாக ரூபா 4945964-33 சதம் இவ்வருட செலவாக ஏற்பட்டுள்ளது.

| 30-03-2004 | கா. சிவசுப்பிரமணியம் | S.Selvendra & Co |
|---|---|---|
| திகதி | முகாமையாளர் | பட்டயக்கணக்காளர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்காபுரம் மகளிர் இல்லம் - தெல்லிப்பழை

### 31 மார்கழி 2003ல் உள்ளவாறான ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| **பொதுநிதி** | | | |
| 1-1-2003ல் மீதி | | 19180522 - 12 | |
| செலவிலும் கூடிய வருமானம் | | 3013595 - 66 | 22194117 - 78 |
| **அறக்கட்டளை நிதி** | | | |
| 1-1-2003ல் மீதி | | | 2644000 - 00 |
| | | | 24838117 - 78 |
| **சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்து | 1 | | 5833316 - 73 |
| வைப்புக்கள் | | | |
| நிலையான வைப்புக்கள் | 2 | 7507493 - 20 | |
| சேமிப்பு வைப்புக்கள் | 3 | 9984096 - 41 | 17491589 - 61 |
| **நடைமுறை வைப்புக்கள்** | | | |
| இலங்கை வங்கி சுன்னாகம் க/இ இல. 4923 | | 556112 - 29 | |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் க/இ 1060012977 | | 574207 - 60 | |
| இலங்கை வங்கி பம்பலப்பிட்டிய க/இ 0037 - 01 - 0004020 - 4 | | 272590 - 14 | |
| காசு | | 110301-41 | 1513211 - 14 |
| | | | 24838117 - 78 |

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் நிதி நடவடிக்கைகள் சரியான முறையில் காட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

**தங்கம்மா அப்பாக்குட்டி** — தலைவர்

**அ. சண்முகநாதன்** — தனாதிகாரி

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 31 - 12 - 2003ல் உள்ள ஐந்தொகை அதே திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கும் பெறுவனவு கொடுப்பனவு கணக்கும் எமக்கு தரப்பட்ட ஏடுகள் ஆவணங்கள் தகவல்களை பரிசீலனை செய்து தயாரித்துள்ளோம். இவை எமக்கு தரப்பட்ட ஏடுகளின் படியும் இத் திகதியில் உள்ள எமது அறிக்கைக்கு அமையவும் சரியாக உள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்றோம்.

30-03-2004 — திகதி

**கா. சிவசுப்பிரமணியம்** — முகாமையாளர்

S.Selvendra & Co — பட்டயக்கணக்காளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காபுரம் மகளிர் இல்லம் - தெல்லிப்பழை

## 2003 மார்கழி 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவு கணக்கு

| வருமானம் | குறிப்பு | ரூபா | சதம் | ரூபா | சதம் |
|---|---|---|---|---|---|
| அன்பளிப்பு | | | | 5822816 | 28 |
| நல்லூர் மணிமண்டபம் திருமண வரவு | | | | 1016150 | 00 |
| பெற்ற வட்டி | 4 | | | 1120593 | 71 |
| | | | | 7959559 | 99 |
| **கழி செலவினம்** | | | | | |
| உணவு | | 645335 | 25 | | |
| கல்வி | | 290853 | 00 | | |
| உடை | | 21874 | 00 | | |
| மருத்துவம் | | 11544 | 50 | | |
| பாவனைப் பொருள் | | 67114 | 00 | | |
| பிள்ளைகளுக்கான அன்பளிப்பு | | 186850 | 00 | | |
| விறகு எரிபொருள் | | 85239 | 57 | | |
| விசேட வைபவங்கள் | 5 | 120221 | 40 | | |
| கோசாலை | 6 | 41436 | 00 | | |
| போக்குவரத்து | | 11100 | 00 | | |
| சம்பளம் | | 350900 | 00 | | |
| விசேட சேவைக்கொடுப்பனவு | | 9500 | 00 | | |
| சேவைக்கான கொடுப்பனவு | | 6312 | 00 | | |
| சேம உதவுதொகை | | 20160 | 00 | | |
| நிர்வாகச் செலவு | | 134720 | 00 | | |
| அச்சுக்கூலி | | 9570 | 00 | | |
| பெறுமானத்தேய்வு | | 533157 | 96 | | |
| சிவத்தமிழ்செல்வி அன்னையர் இல்லம் | 7 | 96697 | 00 | | |
| கணக்காய்வு கட்டணம் | | 12000 | 00 | | |
| யாதிரிகர் விடுதி அன்பளிப்பு | | 1000000 | 00 | | |
| பொது அன்பளிப்பு | 8 | 115850 | 00 | | |
| நல்லூர் மணிமண்டபம் | 9 | 1093363 | 58 | | |
| வங்கி செலவு | | 2535 | 49 | | |
| நானாவித செலவு | | 6923 | 50 | | |
| வான்பராமரிப்பு | | 59451 | 60 | | |
| வங்கி வரி | | 13254 | 98 | 4945964 | 33 |
| செலவிலும் கூடிய வருமானம் | | | | 3013595 | 66 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காபுரம் மகளிர் இல்லம் - தெல்லிப்பழை

**1-1-2003 தொடக்கம் 31-12-2003 வரையான பகுதிக்கான**

**பெறுவனவு கொடுப்பனவு கணக்கு**

| | | |
|---|---|---|
| **1-1-2003ல் மீதிகள்** | | |
| நிலையான வைப்பு | 7507493-20 | |
| சேமிப்பு வைப்பு | 8274549-34 | |
| நடைமுறைவைப்பு | 1024148-47 | |
| காசு | 117451-42 | 16923642-43 |
| **பெறுவனவுகள்** | | |
| அன்பளிப்புக்கள் | 5822816-28 | |
| திருமணம் (நல்லூர் துர்க்கா மணி.மண்.) | 1016150-00 | |
| பெற்றவட்டி-நிலையான வைப்பு | 597791-66 | |
| சேமிப்புவைப்பு | 522802-05 | |
| கோசாலை வரவு | 13250-00 | |
| தீபாவளி | 47500-00 | 8020309-99 |
| | | 24943952-42 |
| **கொடுப்பனவுகள்** | | |
| உணவுச் செலவு | 645335-25 | |
| கல்விச் செலவு | 290853-00 | |
| வைத்திய செலவு | 11544-50 | |
| உடை | 21874-00 | |
| பாவனைப் பொருள் | 67114-00 | |
| போக்குவரத்துச் செலவு | 11100-00 | |
| சம்பளம் | 350900-00 | |
| விசேட கொடுப்பனவு | 9500-00 | |
| கோசாலை பராமரிப்பு | 54686-00 | |
| அன்பளிப்புபிள்ளைகளுக்கு | 186850-00 | |
| எரிபொருள் | 85239-57 | |
| யாத்திரிகர் விடுதி அன்பளிப்பு | 1000000-00 | |
| பொது அன்பளிப்பு | 115850-00 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சிவத்தமிழ்செல்விஅன்னையர் இல்லம் | | 96697-00 | |
| திருமண செலவு(நல்லூர் மணி.மண்.) | | 1093363-58 | |
| நானாவித செலவு | | 6923-50 | |
| நிர்வாகச் செலவு | | 134720-50 | |
| அச்சுக்கூலி | | 9570-00 | |
| பரிசளிப்பு விழா | | 91086-40 | |
| புதுவருடப்பிறப்பு | | 32290-00 | |
| தீபாவளி | | 44345-00 | |
| சேம உதவு தொகை | | 20160-00 | |
| கணக்காய்வு கட்டணம் | | 12000-00 | |
| சேவைக்கால கொடுப்பனவு | | 6312-00 | |
| வங்கி செலவு | | 2535-49 | |
| வான் பராமரிப்பு (TOYATA) | | 59451-60 | |
| வரி | | 13254-98 | |
| **மூலதனச் செலவு** | | | |
| கணனி கொள்வனவு | 109500-00 | | |
| காணி கொள்வனவு | 1066000-00 | | |
| மதில் கட்டியது | 290095-00 | 1465595-00 | 5939151-37 |
| 31-12-2003ல் மீதிகள் | | | 19004801-05 |
| நிலையான வைப்பு | | 7507493-20 | |
| சேமிப்பு வைப்பு | | 9984096-41 | |
| நடைமுறை வைப்பு | | 1402910-03 | |
| காசு | | 110301-41 | 19004801-05 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காபுரம் மகளிர் இல்லம் தெல்லிப்பழை

குறிப்பு இல: 2

## நிலையான வைப்புக்கள்

| வங்கியின் பெயர் | பொது | | அறக்கட்டளை | | 31-12-2003ல் மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | சதம் | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் | 900000-00 | | 346000-00 | | 1246000-00 | |
| தேசிய சேமிப்ப வங்கி யாழ். | | | 928493-20 | | 928493-20 | |
| தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் | 500000-00 | | 1097000-00 | | 1597000-00 | |
| இலங்கை வங்கி சுன்னாகம் | 1100000-00 | | 1086000-00 | | 2186000-00 | |
| மக்கள் வங்கி காங்கேசன்துறை | | | 100000-00 | | 100000-00 | |
| மக்கள் வங்கி சுன்னாகம் | | | 100000-00 | | 100000-00 | |
| இலங்கை வங்கி பம்பலப்பிட்டி | 35000-00 | | 1000000-00 | | 1350000-00 | |
| | 2850000-00 | | 4657493-20 | | 7507493-20 | |

குறிப்பு இல: 3

## சேமிப்பு வைப்புக்கள்

| கணக்கு இல. | வங்கியின் பெயர் | 31-12-2003ல்மீதி ரூபா சதம் |
|---|---|---|
| 6023 | இலங்கை வங்கி காங்கேசன்துறை | 111197-13 |
| 10072-01-8062-9 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம். | 1893480-80 |
| 10006-02-72370 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் | 616369-67 |
| 21288 | இலங்கை வங்கி சுன்னாகம். | 2268040-20 |
| 1-0070-02-1415-9 | தேசிய சேமிப்பு வங்கி வெள்ளவத்தை | 1403596-72 |
| 020072801-8 | வரையறுக்கப்பட்ட கற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் | 505172-30 |
| | முற்போக்கு சேமிப்புக் கணக்கு | |
| 8600960001 | வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி யாழ். | 1786239-59 |
| | | 9984096-41 |

குறிப்பு இல: 4

## பெற்ற வட்டி

| கணக்கு இலக்கம் | வங்கியின் பெயர் | ரூபா சதம் |
|---|---|---|
| | சேமிப்பு வைப்பு | |
| 10072-01-8062-9 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம். | 106004-26 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 10006 02 – 72370 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் | 34940 – 14 |
| 10070 – 02 – 1415 – 9 | தேசிய சேமிப்பு வங்கி வெள்ளவத்தை | 80441 – 74 |
| 6023 | இலங்கை வங்கி காங்கேசன்துறை | 75925 – 83 |
| 21288 | இலங்கை வங்கி சுன்னாகம் | 88830 – 20 |
| 02 – 0772801 – 8 | வரையறுக்கப்பட்ட கற்றன் நஷனல் வங்கி சுன். | 5172 – 30 |
| | **முற்போக்கு சேமிப்பு கணக்கு** | |
| 8600960001 | வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி யாழ். | 131487 – 58 |
| | | 522802 – 05 |
| | **நிலையான வைப்பு** | 597791 – 66 |
| | | 1120593 – 71 |

**குறிப்பு இல: 5** **விசேட வைபவங்கள்**

| | வருமானம் | செலவுகள் | தேறிய வரு/செலவு |
|---|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| பரிசளிப்பு விழா | | 91086-40 | (91086-40) |
| தீபாவளி | 47500-00 | 44345-00 | 3155-00 |
| புதுவருடப்பிறப்பு | | 32290-00 | (32290-00) |
| | 47500-00 | 167721-40 | 120221-40 |

**குறிப்பு இல: 6** **கோசாலை பராமரிப்பு**

| | வருமானம் | செலவுகள் | தேறிய செலவு |
|---|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| கோசாலை | 13250-00 | 54686-00 | 41436-00 |

**துர்க்காபுரம் மகளிர் இல்லம் தெல்லிப்பழை**

**குறிப்பு இல: 7** **சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம்**

| | |
|---|---|
| காய்கறிகள் | 66697-00 |
| ஊழியர் வேதனம் விசேட படி | 30000-00 |
| | 96697-00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு இல: 8 **பொது அன்பளிப்பு**

| | | |
|---|---|---|
| ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் – யாத்திரிகர் விடுதி | | 1000000 – 00 |
| குருக்கள் கிணற்றடி பிள்ளையார் கோவில் அன்னதானம் | | 5000 – 00 |
| உடுவில் ஆக் நிறுவனம் | | 10000 – 00 |
| ஊழியர் சேவைக்கான உதவி – சி. தவனேஸ்வரி | 50000 – 00 | |
| க. மணிமேகலை | 1000 – 00 | 51000 – 00 |
| **பாடசாலைகள்** | | |
| மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் விளையாட்டு மைதானம் வாங்க | 15000 – 00 | |
| மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் பரிசளிப்புவிழா | 5000 – 00 | |
| இராமநாதன் கல்லூரி பரிசளிப்பு விழா | 10000 – 00 | 30000 – 00 |
| முதல்பிரதி பெறுதல் | | 5000 – 00 |
| பிறந்தநாள் | | 3350 – 00 |
| திருமணம் | | 1000 – 00 |
| பிரயாணச் செலவு | | 1000 – 00 |
| அபரக்கிரியை | | 5000 – 00 |
| கஸ்ர நிவாரணம் கொடுப்பனவுகள் | | 4500 – 00 |
| | | 1115850 – 00 |

குறிப்பு இல: 9.1 **நல்லூர் மணிமண்டப நானாவித செலவு**

| | |
|---|---|
| விறகு | 4910 – 00 |
| உபசரணை | 4001 – 00 |
| ஒலிபெருக்கி | 1400 – 00 |
| சுத்தம் செய்தல் | 5901 – 00 |
| மரம் தறித்தல் | 4543 – 00 |
| அன்பளிப்பு | 3000 – 00 |
| பொது | 1036 – 00 |
| | 24791 – 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

குறிப்பு இல: 9

## நல்லூர் மணிமண்டப செலவு

| | | | |
|---|---|---|---|
| திருமண பொருட்கள் | | | 53226-00 |
| பூமாலை | | | 7950-00 |
| மங்கள வாத்தியம் | | | 208250-00 |
| மணவறை | | | 76500-00 |
| வேதனமும் விசேட படியும் | | | |
| அந்தணர் | | 13800-00 | |
| ஊழியர் | | 167200-00 | |
| சமையற் பணி செய்வோர் | | 137000-00 | 318000-00 |
| மின்கட்டணம் | | | 49815-83 |
| திருமண மீளளிப்பு | | | 48000-00 |
| திருத்தமும் பராமரிப்பும் | | | 59884-00 |
| போக்குவரத்தும் பிரயாண படியும் | | | 30150-00 |
| தொலைபேசி (அமைப்பு) (021-222 7140) | | | 254000-00 |
| வர்ணம் பூசுதல் | | | 12495-00 |
| காணி பெயர் மாற்றம், சோலை வரி கட்டணம் | | | 3147-75 |
| சமய நிகழ்ச்சி அபிஷேகம் | | 3350-00 | |
| குருபூசை | | 500-00 | |
| தைப்பொங்கல் | | 727-00 | |
| நவராத்திரி | | 1000-00 | 5577-00 |
| மின்சாரப்பொருள் | | | 6214-00 |
| நானாவிதம் 9.1 | | | 24791-00 |
| மூலதனச் செலவு மேற்கு மதில் | 98535-00 | | |
| உபகரணம் கொள்வனவு | 60428-00 | | |
| அலங்கார மாலை | 5000-00 | | 163963-00 |
| | | | 1093363-58 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லப்பணியாளர் விபரம்:

| | |
|---|---|
| திரு. கா. சிவபாலன் | - பிரதம லிகிதர் |
| செல்வி த. மஞ்சுளா | - உதவி லிகிதர் |
| செல்வி ச. ரேவதி | - உதவி லிகிதர் |
| திருமதி சி. தவனேஸ்வரி | - உதவி லிகிதர் |
| செல்வி க. காமாட்சி | |
| செல்வி பெ. செல்வராணி | |
| செல்வி செ. நாகராணி | |
| செல்வி எஸ். மீனா | |
| செல்வி சு. சுகந்தினி | |
| திருமதி சி. தேவி | |

**வங்கிகள்:**

1. இலங்கை வங்கி சுன்னாகம் க/இ. **4923**
2. இலங்கை வர்த்தக வங்கி யாழ். க./இ. **106 0012977**
3. இலங்கை வங்கி பம்பலப்பிட்டி க./இ. **0037-01-0004020-4**

**பட்டயக் கணக்காய்வாளர்:**

**செல்வேந்திரா அன்கோ. யாழ்ப்பாணம்.**

**நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்:**

| | |
|---|---|
| 1. திரு. வி. கமலநாதன் | இணைப்பாளர் |
| 2. திரு. சி. சண்முகானந்தன் | பணியாளர் |
| 3. திரு. செ. கதிர்காமநாதன் | பணியாளர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org